





# சாந்தவெளி

– ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்

ஒரு ஏகாந்தமான தலம். அந்த ஏகாந்தமான தலத்திலே ஒரு பிரம்மாண்டமான ஆல விருட்சம். சுற்றிலும் இறங்கிய விழுதுகள், ஓர் ஆயிரங்கால் மண்டபத்தையே சிருஷ்டித்து விட்டிருந்தன. அந்தப் பரந்தவெளியிலே பூராவும் மேலே அண்ணாந்து பார்த்தால், எங்கோ எட்டாத உயரத்தில் பல கிளைகள். கிளைக்குக்கிளை ஒன்றையொன்று தாவித் தழுவி நீலவானை மறைத்துப் பச்சைப் பந்தல் வேய்ந்திருப்பதைக் காணலாம். சொட்டுத் தண்ணீர் கீழே விழுமோ என்பது சந்தேகமே. இந்தப் பந்தலின் கீழ் பரந்த மணல் மேடு. அந்த மணல் மேட்டின் தென்புறம் குடமுருட்டியாறு. வடபுறம் பயிருக்கு உயிரளிக்கும் பொன்னி நதியின் சிறு வாய்க்கால். இப்படியாக இத் தலத்தைச் சுற்றிலும் நதியின் சிறு வாய்க்கால், நதியின் படுகையும், வயற்காடும், சிற்றூர்களுமாகத் துலங்கின. அந்த தலத்திலே வேறொரு செடி கொடியோ, புற் பூண்டோ, மரமோ, சிறு குடிலோ கூட இல்லை. அந்த மணற்பாங்கான தலத்திலே இந்த ஆலமரம் ஒன்றே தனியரசு புரிந்து வந்தது.

ஓர் அற்புதம் விளைந்தது அந்த ஆலமரத்தடியிலே. சுமார் முன்னூறு வருடங்களுக்கு முன்பாகவே இருந்து வருவதாகக் கூறப்படும் நான்கு அடி உயரமுள்ள ஓர் ஆஞ்சநேயர் சிலை, அங்கு கோயில் கொண்டுள்ளது. அது ஏற்பட்ட காலத்தையோ பிரதிஷ்டை செய்யப்பட்ட காரணத்தையோ கூறுபவர் எவருமிலர்.

ஒரு காலத்திலே அண்மையிலுள்ள சிற்றூரைச் சார்ந்த ஒரு குடியானவன்; மாட்டிடையன் எனலாம். அவனுக்குச் சொந்தமான மாடு ஒன்று; அது காணாமல் போய்விட்டது. மூன்று நாட்களாகத் தேடி அலையாத இடம் இல்லை. குடும்ப ஜீவாதாரமாக இருந்து வந்த வாயில்லா ஜீவன்; அதுவும் கன்று போடும் தறுவாயில் காணாமல் போய்விட்டது என்றால் அந்த ஏழை கதறி அழாமல் என்ன செய்யக் கூடும்! மூன்றாம் நாள் இரவு சற்றுச் சோர்ந்து கண்ணுறங்கினான். பளிச்சென்று கனவில் ஒரு தோற்றம். கனிவு தரும் பார்வையும், முதிர்ந்த வயதும் கொண்ட ஒரு பெரியவர் தோன்றி, ‘இங்கே ஆல மரத்தடிக்கு வா, உன் மாட்டைக் காண்பாய்‘ என்று கம்பீரமான குரலில் கணீரென்று அழைக்கக் கேட்டான்.

பொழுது புலர்ந்தது. எழுந்து ஓடினான் அத்திடலை நோக்கி, எப்படியோ குடமுருட்டி யாற்றைக் கடந்து அந்த ஆலமரத்தடிக்கு வந்தான். அங்கே மரத்தடியில் கோயில் கொண்டிருந்த அந்த ஸ்ரீ ஆஞ்சநேயர் முகமண்டலம் கனவில் கண்ட பெரியவர் முகம் போலத் தோன்றியது. அவர் காலடியிலே எருமையையும், அன்றே பிறந்த கன்றையும் கண்டான். கண்களிலே நீர் மல்கிற்று. கரம் குவித்து, சிரம் வணங்கி, தரையிலே நெடுங்கட்டையாக விழுந்து வணங்கினான். ‘என் மாட்டைக் காப்பாற்றிக் கொடுத்த தெய்வமே! என் பெண்டு பிள்ளைகள் பிழைக்க வழி செய்த கடவுளே! உனக்கு நான் என்ன பூசை போடுவேன்!‘ என்று இறைஞ்சினான். இச்செய்தி சுற்று வட்டாரங்களில் பரவிற்று. அன்று முதல் இந்த ஆலமரக் கடவுளைத் தரிசிக்க சுற்றிலுமுள்ள மக்கள் கூட்டம் கூட்டமாக வரத் தலைப்பட்டனர். பிரார்த்தனைகள் செலுத்தினர். பால் அபிஷேகங்கள் செய்தனர். மக்களின் வேண்டுதலுக்கு உடனுக்குடன் செவிமடுத்து செயலாற்றும் திறம்படைத்த கடவுளாகப் போற்றி வழிபடுகின்றனர், இந்த வீர ஆஞ்சநேயக் கடவுளை அந்த வட்டாரக் குடி மக்கள்.

ஆயிரக் கணக்கான ஏழைக் குடிமக்களின் குறை தீர்க்கும் கடவுளாக விளங்கும் இந்த ஆல மரக் கடவுளுக்கு ஓர் ஆலயம் கட்ட வேண்டுமென வெகு காலமாக முயற்சி செய்து பார்த்தனர் அவர்கள். ஆனால்

ஒவ்வொரு தடவையும் அவர்கள் எண்ணம் நிறைவேறாதபடி பல இடையூறுகள் ஏற்பட்டன. எனவே ஆலயத்தை விரும்பவிலலை அனுமார் என முடிவு செய்தனர் மக்கள்.

இந்த வட்டாரங்களிலே சுற்றிக் கொண்டிருந்த ஒரு ஞான சித்தர் ஒரு சமயம் இந்த ஆஞ்சநேயக் கடவுளைத் தரிசிக்க வந்தார். சித்தரின் மனம் இந்த ராமதாசரிடம் ஈடுபடலாயிற்று. அனுமானுக்கு அமுது செய்து படைப்பதற்காகவாவது ஓர் கட்டிடம் தேவை என தீர்மானித்தார் சித்தர். நிதி குவிந்தது; ஒரு பாகசாலைக்கு கால்கோள்விழா நடந்தது. ஒரு கிணறு தோன்றியது. ஊடே சில இடையூறுகளும் தோன்றின. ஆனாலும் அயரவில்லை சித்தர்! பல சிரமங்களுக்கு இடையே ஒரு உக்கிராண அறையையும் எழுப்பினர். சித்தரின் ச்ரத்தையும், பக்தர் தம் பணியும் சேர்ந்து உருவாக்கிவிட்டது – ஓர் அமுது படைக்கும் பாகசாலையை.

பாகசாலைத் திறப்பு விழாவிற்கு தேதி குறிப்பிடப்பட்டது. ஆவணி மாதத்தின் கடைசி நாட்கள், மாரி கால மழை பெய்யத் தொடங்குமோ என்ற ஐயம். ஆயிரக் கணக்கான பக்தர்கள் கூடி இருந்தனர் – அந்த குறிப்பிட்ட தேதியிலே, அந்த மணல் திடலிலே! ஞான சித்தரின் அடியார்கள் பலர் டில்லி, சென்னை முதலிய நகரங்களிலிருந்தும் அங்குவர இருந்தனர். வேகமாக வெள்ளம் பெருகியோடும் குடமுருட்டி ஆற்றுக்கோ அங்கே பாலமில்லை. ஆற்றைக் கடந்தாலன்றி அந்த ஆலமரத்தடியை, பெருவாரியான மக்கள் அடைய சாத்தியமில்லை. சுற்றியுள்ள சிற்றூர்களிலெல்லாம் ஆஞ்சநேய பக்தர்கள் பலர் இருந்தனர். அன்று ராமன் சீதையைத் தேடிச் சென்ற போது அணை கட்டவில்லையா? சித்தாரோ மூங்கில் பாலம் வேண்டுமென்றார். சித்தர் உத்திரவிட மூங்கில் கழிகளும், பனை மரப் பலகைகளும் வண்டி வண்டியாக வந்து குவிந்தன.

ஓடும் நதியிலே குதித்து மூங்கிற் கழிகளை நட முற்பட்டனர் சித்தரும் பக்தரும். ஓரிரண்டு நாட்களில் செம்மையான, சுமார் 300 அடி நீளமுள்ள மூங்கிற் பாலம் அமைந்துவிட்டது. என்னே அதிசயம்! வந்தனர் அரசாங்க அதிகாரிகள்! ‘எங்கள் அனுமதி பெறாமல் இப்பாலத்தை யார் கட்டியது?‘ என்று வினவினர் ஊர் மக்களை. செய்தி அறிந்து சித்தர் வந்தார். கடவுள் திருப்பணியிது ஆட்சேபிக்கக் கூடாது என்று அமைதியாக சாந்தமாக பதிலளித்து விபூதி பிரசாதமும் வழங்கினார். ஆற்று மணலை அள்ளிக் கையில் கொடுத்தார். அது வெல்லக் கட்டியாக மாறியது. தலைமை சூப்பரின்டெண்டும், இன்ஜினியரும் திகைத்துப் போயினர். பிறகு அந்த மூங்கில் பாலத்தைச் செவ்வனே சோதித்துப் பார்த்தனர். ஆச்சரியம் தாங்கவில்லை அவர்களுக்கு! இரு ஆண்டுகள் தாங்கக் கூடிய இத்தனை வலுவான பாலம் வெள்ளம் பெருகியோடும் நதியின் மத்தியிலே எந்தவித இயந்திர சாதனமும், நிபுணரின் உதவியுமின்றி, அதுவும் இரண்டொரு தினங்களுக்குள்ளே கட்டி முடித்திருப்பதைக் கண்டு பிரமித்தனர். ஆல மரத்தடி ஆஞ்சநேயரின் சக்தியையும், சித்தரின் அற்புத சாதனையையும் பாராட்டி அந்த பாலத்திற்கான அனுமதியையும் அளித்துச் சென்றனர் வந்த அரசாங்க அதிகாரிகள்.

8-9-60 அன்று குடமுருட்டி ஆற்றங்கரையினிலே அந்த பிரம்மாண்டமான ஆல மரத்தினடியிலே கோயில் கொண்டுள்ள ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமிகளுக்கு பாகசாலை திறப்பு விழாவையொட்டி பாலாபிஷேகங்களும் பூசை முதலியனவும் வெகு சிறப்பாக நடைபெற்றன. ஐந்து மூட்டை செந்நெல் அரிசி கொண்டு பொங்கல், புளியோதரை முதலிய பக்குவன்னங்கள் செய்யப்பட்டன சமாராதனைக்காக.

அந்த ஆல மரத்தினடியிலே எங்கும் பூப் பந்தல்! பச்சோலைப் பந்தல்! ஆலம் விழுதுகள் தோறும் தென்னை, கமுகு குருத்துக்களும் குலைகுலையாக செவ்விளநீர் தேங்காய்களும், வாழைக் குலைகளும் குலுங்கின. ஆப்பிள் திராக்ஷை போன்ற பழ வகைகளும் அநுமானின் ப்ரீதிக்காக கொத்துக் கொத்தாகக் காட்சி

அளித்தன. மரக் கிளைகளூடே. டைனமோ செட்டுடன் வந்து அந்த மணல் திடல் பூராவும் மின்சார வண்ண விளக்குகளால் ஜகஜ்ஜோதியாக விளங்கச் செய்துவிட்டார் ஒரு பக்தர்.

சுமார் ஐயாயிரம் மக்கள் கூடிவிட்டனர் அங்கே! காலை முதற்கொண்டு நாம சங்கீர்த்தனங்கள், பஜனை பாராயணங்கள், கதாகால க்ஷேபம், இன்னிசைக் கச்சேரிகள் இடைவிடாது நடைபெற்றன. அநுமன் சந்நிதியிலோ வேத கோஷமும் சந்நிதி மணியோசையும், பக்திப் பரவசப் பாடல்களும் ஒலித்துக் கொண்டே இருந்தன. சித்தருடைய சித்து விளையாட்டும், ஸ்ரீ ஆஞ்சநேயக் கடவுளின் அருட்கடாட்சமும் சேர்ந்து அங்கே கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களின் மனதையும் ஒருமுகப்படுத்திப் பரவச நிலைக்கு ஈர்த்துச் சென்றுவிட்டது என்று சொல்லும்படி இருந்தது அந்நேரம். முதலில் வெறும் மந்தைவெளியாக இருந்த ஒரு திடல் மக்கள் கூடும் காரணமாக சந்தைவெளியாக மாறி, பிறகு இன்று இவ்வைபவத்தின் காரணமாகச் சாந்த வெளியாகத் திகழும் அற்புதக் காட்சியை என்னவென்று சொல்வது!

குடமுருட்டி ஆற்றின் குறுக்கே தோன்றிய அந்த அற்புதமான மூங்கில் பாலத்தைக் கண்ட மக்கள், வியப்புற்று நின்ற நிலையிலே நின்றுவிட்டனர். அந்த பாலத்தைக் கடந்து சென்று மக்கள் கூட்டம் கூட்டமாக ஸ்ரீ வீர ஆஞ்சநேயரின் திவ்ய தரிசனத்தைப் பெற்றுத் திருப்தியுடன் திரும்பிச் சென்றனர். கண் கண்ட – நடமாடும் தெய்வமாக தம் அடியார்களுக்குத் தென்படும் அந்த ஞான சித்தரைத் திரள் திரளாக மக்கள் வந்து சூழ்ந்து கொண்டே இருந்தனர். அவர் அருளும் அருள் பிரசாதத்தையும் பெற்று வணங்கி, மக்கள் கூட்டம் திரும்பிச் செல்லச் செல்ல மேன்மேலும் புதிய கூட்டம் அலைமேல் அலைபோல, அவரை வந்து சூழ்வதைக் கண்டேன். இந்தக் கண் கொள்ளாக் காட்சி பல ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டிலே அண்ணல் காந்தியடிகள் நடத்திய பிரார்த்தனைக் கூட்டத்தை என் ஞாபகத்திற்குக் கொண்டுவந்து நிறுத்தியது. வியப்பால் மெய் சிலிர்க்கப் பரவசமடைந்தேன்.

நாம் கல்வித் துறையிலே மேனோக்கிச் செல்லச் செல்ல, நமக்கு ஆன்மீக துறையிலே பரிச்சயம் குறைந்துகொண்டே போகிறது. விஞ்ஞான உதவி மூலமும், பல இயந்திர சாதனைகளின் மூலமும் உலகில், எங்கெங்கோ பல அற்புதங்கள் செயல்படுவதை நாம் கேள்விப்படுகிறோம். கண்ணால் காணவும் செய்கிறோம்.

ஆனால், பாரத நாட்டிலே, முக்கியமாக தமிழ்நாட்டிலே எங்கெங்கோ பல மூலை முடுக்குகளிலிருந்து வரும் நாம் கேள்விப்படும், அற்புத நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளை நாம் லட்சியம் செய்கிறதில்லை.

கடவுள் சக்தி, நம் நாட்டில் நடமாடும் மகாத்மா, சித்தர்களின் அரிய சாதனைகள், இவை எவ்வித இயந்திர சாதனைகளின் உதவியின்றி, விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் எட்டாத நிலையிலிருந்து எவ்வளவு அற்புத நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டக்கூடும் என்பதை நேரில் தம் கண்ணாலேயே கண்ட ஒருவர் வந்து சொன்னாலும்கூட நாம் அதை எளிதில் நம்புவதுமில்லை.

'சமசயாத்மா வினச்யதீ' அதாவது சந்தேகம் அடைகிறவன் அழிவை அடைகிறான் என்பதைப்போல் நம்மில் பலருக்கு இவ்வித அற்புதங்களில் உதிக்கும் சந்தேகங்களை எண்ணும்போது கீதைப் பேருரையின் உந்நத வாக்கியம்தான் நினைவிற்கு வருகிறது.

கல்வித்துறையில் சிறிதும் முன்னேற்றம் அடையாத கிராம மக்களோ வெனில் காதால் கேட்ட அளவில் இந்த அற்புத நிகழ்ச்சிகளைக் கடவுள் திருவிளையாடல்தான் என நம்புகின்றனர். அந்த அற்புதங்கள் நிகழ்ந்த இடத்திற்குச் சென்று தரிசிக்க விழைகின்றனர். மக்கள் சென்று அங்கே கோயில் கொண்டிருக்கும் கடவுளையும்

கடவுளின் பிரதிநிதியாக நடமாடும் தெய்வமாக விளங்கும் பெரியாரையும், பயபக்தியுடன் வழிபடுகின்றனர். அந்த ஞானச்சித்தரின் அருட் பிரசாதத்தைப் பெறுவதற்குப் பாத்திரமாகவும் ஆகின்றனர். அவர்களே பாக்கியசாலிகள் என்பேன்.

*குறிப்பு : 'சாந்தவெளி' என்ற இந்த ஆஞ்சநேய ஸ்தலம் கும்பகோணம் தாலுக்கா விசலூர் என்ற கிராமத்தில் உள்ளது. வலங்கைமான் என்ற ஊருக்குக் கிழக்கேயுள்ள ஆண்டாங்கோயில் என்ற கிராமத்திற்கு வடக்கே குடமுருட்டி ஆற்றின் வடகரையில் உள்ளது. வலங்கைமானிலிருந்து குடவாசல் செல்லும் பஸ் மூலம் செல்லலாம்.*